# தமிழ்மொழி கற்றல்விழா 2017

## நடவடிக்கைகள் விளக்கம்

| No | Activities | Details |
|---|---|---|
| 1 | **வில்லுப்பாட்டு** | • பயிற்றுவிப்பாளர்கள் வில்லுப்பாட்டு பற்றிய விளக்கமும் பயிற்சியும் அளிப்பர்<br>• தமிழின் சிறப்பை உணர்த்தும் வகையில் வில்லுப்பாட்டைத் தயாரிப்பர்<br>• மாணவர்கள் பயிற்றுவிப்பாளர்களோடு இணைந்து வில்லுப்பாட்டைத் தயாரித்துப் படைப்பர் |
| 2 | **கதை அரங்கம்** (Story Theatre) | • நடிப்புக்குரிய உத்திகளைப் பயிற்றுவிப்பாளர்கள் மாணவர்களுக்குக் கற்றுக்கொடுப்பர்<br>• பயிற்றுவிப்பாளர்கள் மாணவர்களுக்குக் கதையை நாடகமாக்கி நடித்துக்காட்டுவர்<br>• மாணவர்களும் நாடகத்தை உருவாக்கி நடித்துக் காட்டுவர் |
| 3 | **அகப்பை ஓவியம்** | • பயிற்றுவிப்பாளர்கள் அகப்பையில் (wooden ladle) ஓவியம் வரையும் முறையைக் கற்றுக்கொடுப்பர்<br>• கருப்பொருளின் அடிப்படையில் மாணவர்கள் அகப்பை ஓவியம் வரைவர் |
| 4 | **பொம்மைக் கதைகள்** | • பொம்மைக் கதைகளின் முக்கியத்துவத்தைப் பயிற்றுவிப்பாளர்கள் விளக்குவர்<br>• பொம்மைகளை (Puppets) வைத்துக் கதை சொல்வதற்குப் பயிற்சி அளிப்பர்<br>• மாணவர்கள் பொம்மைகளை வைத்து ஒரு கதையை உருவாக்கிப் படைப்பர் |
| 5 | **கரகம் தயாரிப்பது** | • கரகம் உருவாக்கும் முறையைப் பயிற்றுவிப்பாளர்கள் கற்றுக்கொடுப்பர்<br>• மணிகள், கரகப்பானை, கும்பம், காகிதப்பூக்கள் போன்றவற்றைக்கொண்டு கரகம் உருவாக்குவர்<br>• மாணவர்கள் தாம் செய்த கரகத்தைத் தலையில் வைத்து இசைக்கேற்ப ஆடிப்பழகுவர் |
| 6 | **நிகழ்ச்சி படைப்பாளர்** | • வசந்தம் தொலைக்காட்சிக் கலைஞர்களுள் ஒருவர் இப்பயிற்சியை வழங்குவார்.<br>• ஒரு நிகழ்ச்சியைப் படைக்கும் முறை பற்றிய விளக்கம் மாணவர்களுக்கு அளிக்கப்படும்<br>• மாணவர்களும் ஒரு நிகழ்ச்சியைப் படைத்துக் காட்டுவர் |
| 7 | **பாரம்பரிய விளையாட்டுகள்** | • கபடி, உறியடி, ஒரு குடம் தண்ணி ஊற்றி... என்பன போன்ற பாரம்பரிய விளையாட்டுகளில் ஈடுபட்டுப் பயனடைவர் |
| | | **Finale Item** |
| 8 | **கலைநிகழ்ச்சி அங்கம்** | • தமிழ்மொழியின் சிறப்பை உணர்த்தும் கலைநிகழ்ச்சி அங்கம் நடைபெறும்<br>• மேடையில் ஏறி  இந்நிகழ்ச்சியைப் படைக்க மாணவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படும் |